# திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (04.11.2015 முதல் 08.11.2015 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612101
போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 04352472881

==============================================================

தேதி : 03.11.15

### கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (30.10.2015 - 02.11.2015)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 53.3 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 30 – 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 25 – 26 |
| மேக மூட்டம் | 4 – 6 |
| ஈரப்பதம் (%) | 78 – 87 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 3 – 4 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 04/11/15 | தேதி-2 05/11/15 | தேதி-3 06/11/15 | தேதி-4 07/11/15 | தேதி-5 08/11/15 |
| மழை (மி.மீ) | 15 | 12 | 12 | 24 | 16 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்தபட்சவெப்பநிலை(டி.செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (%) | 75 – 81 | 74 – 80 | 72 – 78 | 76 – 82 | 74 – 80 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணிக்கு) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

04.11.15 முதல் 08.11.15 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 12 - 24 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**முக்கிய பயிர்: நெல்**

**சம்பா : தூர்கட்டும் பருவம் ; தாளடி: நடவு பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை (12 - 24 மி.மீ). எதிர்பார்க்கப்படுவதால் தாளடி பருவ நடவு வயலை தயார் செய்யவும்.
- மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- சம்பா நெற்பயிரில ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு 25 கிலோ யூரியா + வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து தண்ணீர் வடிந்த உடன் வயலில் இடவும்.
- சம்பா நெற்பயிரில் குலை நோய்த் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த கார்பென்டெசிம் 200 கிராம் / ஏக்கர் அல்லது டிரைசைக்ளோசோல் 200 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.
- சம்பா நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 20 இ.சி. 500 மி.லி./ ஏக்கர் அல்லது புரபனோபாஸ் 50 இ.சி. ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

இயக்குநர்